[7th May 1954

MR. SPEAKER—" அவர் அப்படிச் சொல்லவில்லையென்று நினைக்கிறேன்."

SRI M. KALYANASUNDRAM :—" சர்க்காருக்குத் தெரியுமா என்று அவர் கேட்டார். பண வசதி அதிகமாக இருப்பவர்களை இந்த வியாதி அதிகமாக பாதிப்பது தெரியுமா என்று கேட்டார்கள். அவர் சொல்வதுபோல் பணம் படைத்தவர்களுக்கு இந்த வியாதி அதிகமாக வருகிறதென்று சொன்னால், அவர்கள் பணத்தைக் கொடுத்துவிட்டால் நல்லதாகப்போய்விடும். பணத்தால்தான் க்ஷயரோகம் வருவதாக இருந்தால், பணத்தைக் கொடுத்துவிடுவது உசிதமான வழியாக இருக்கும்.

" நான் மந்திரி அவர்களைக் கேட்டுக்கொள்வதென்னவென்றால், ஏழை மக்களாக இருப்பவர்கள் ஆஸ்பத்திரிகளுக்குச் சென்று, தங்களுக்கு என்ன வியாதி வந்திருக்கிறது என்று பரிசோதித்து தெரிந்துகொள்வதற்கு வசதி இல்லாததால், வியாதிகளுக்குக் காலாகாலத்தில் சிகிச்சை செய்துகொள்ள முடியாமலிருக்கிறதென்பது அவர்களுக்குத் தெரியுமா என்று கேட்கிறேன்."

THE HON. RAJA SRI SHANMUGA RAJESWARA SETHUPATHI :—" No, Sir. They have all been given treatment free of cost, without mentioning any particular affliction. All the workers affected with diseases are being given free treatment in the Government Hospitals and the Sanatorium."

Working of National Extension Scheme in South Arcot district.

* 555 Q.—SRI A. RATNAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the progress of Development work under the " National Extension Scheme " in the South Arcot district and the amount spent so far?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" The National Extension Service was launched in three blocks in the South Arcot district on 2nd October 1953. One hundred and sixteen works under Rural Water supply, 54 works under Village Communications and 49 other items were taken up. Some of them have been completed and others are in progress. A sum of Rs. 19,990 has been spent so far."

SRI A. RATNAM :—" ஸார், தென்னுற்காடு ஜில்லா சம்பந்தப்பட்ட வரையில், இந்த தேசிய விஸ்தரிப்புத்திட்ட வேலைகளினால் பொதுமக்கள் எவ்வளவு தூரம் நலன் அடைந்திருக்கிறார்கள், அந்த இடங்களில் எத்தனை பேர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்."

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" Sir, I am sorry I shall not be able to give any statistics about the number of persons who have benefited from these road works, water supply works and all that, nor am I in a position to furnish statistics about the number of men who have been engaged in these works."

SRI K. R. NALLASIVAM :—" ஸார், தென்னுற்காடு ஜில்லாவில் தேசிய விஸ்தரிப்புத் திட்டம் கொண்டுவந்ததற்குப் பின்னால் விவசாயிகள் கூட்டுறவு சங்கங்களுக்கு எவ்வளவு தொகை செலவிடப்பட்டது என்பதை மந்திரி அவர்கள் தெரிவிப்பார்களா ? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" I would like to have notice, Sir."